# திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(10.05.2017 முதல் 14.05.2017 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==============================================================================

தேதி:09.05.2017

## கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (05.05.2017– 08.05.2017)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 37 – 40 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 30 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 54 – 61 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 2 – 5 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 10.05.2017 | நாள் 2 11.05.2017 | நாள் 2 12.05.2017 | நாள் 4 13.05.2017 | நாள் 5 14.05.2017 |
| மழை (மி.மீ.) | 6 | 9 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 39 | 39 | 39 | 38 | 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 29 | 29 | 29 | 27 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 55 – 60 | 55 – 60 | 55 – 60 | 55 – 60 | 55 – 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 3 | 3 | 3 | 5 | 5 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

10.05.2017 முதல் 14.05.2017 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை அளவு 6 – 9 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், இறவை உளுந்து மற்றும் நெல் தரிசு பருத்தி**

**பருவம் : நெல் தரிசு பருத்தி: வளர்ச்சி பருவம்.**

- நெல் நடவு வயலில் அடியுரமாக ஏக்கருக்கு22 கிலோ யூரியா + 18 கிலோ ஜிப்சம் + 4 கிலோ வேப்பம்புண்ணாக்கு என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின் 10 கிலோ முரியேட் ஆப்பொட்டாஷ் உடன் கலந்து வயலில் இடவும். மேலும், மனிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும்.
- இறவை உளுந்து பயிருக்கு அடியுரமாக ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் மற்றும் 45 கிலோ ஜீப்சம் இட வேண்டும்.
- நெல் தரிசில் பயிரிடப்பட்ட பருத்தி மற்றும் இறவை உளுந்து பயிரில் அசுவினி இலைப்பேன், செம்பேன், தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03 சதம் (3 மி.லி./லி) ஒட்டும் திரவத்துடன் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். சேதம் அதிகரிக்கும் போது இமிடாகுளோபிரிட் 200 எஸ்.எல் 40 மி.லி (ஏக்கர்) 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**கால்நடைகளுக்கு**

- மாடுகளுக்கு வெப்ப அயர்ச்சியால் ஏற்படும் பால் உற்பத்தி இழப்பை குறைக்க சமையல் சோடாவை தீவனத்துடன் 100 கிராம் என்ற அளவில் கலந்து அளிக்க வேண்டும்.
- கோடைக்காலங்களில் கால்நடைகள் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைவாக இருப்பதால் தேவையான அமினோ அமிலங்கள், உயிர்ச்சத்துக்கள் மற்றும் தாது உப்புக்கள் போன்ற நுண்ணூட்ட சத்துக்களின் அளவை தீவனத்தில் அதிகரிக்க வேண்டும்.
- பருவத்திற்கு வந்த மாடுகளை காலை 9.00 மணிக்குள் செயற்கை முறை கருவூட்டல் செய்ய வேண்டும்.

**இயக்குநர்**